Sri Durgadevi Devastanam - Tellippallai.


# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ✲ ஆடி 1987 ✲ இதழ் - 139


# மங்கையர் பிறப்பு மகத்தானது

**மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்யவேண்டும். உலகளாவிய ஐக்கியநாடு களுக்கு மகத்தான பெண்தலைவியைத் தந்த பாரதநாடு, முன்னரே மங்கையர் திலகங் களையும் மகரிஷி பத்தினிமாரையுந் தந்தது. மகரிஷி யாக்ஞவல்கியரின் விவேகம் பூத்த மனைவியர் பெரிய சிந்தனைச் செல்வியர்.**



சமவுடைமை பொதுவுடைமைத் தத்துவங்கள் வரு வதன் முன் பரவையார் பறையறைந்து நெற்குவியல் களை எல்லோருக்கும் பங்கிடு செய்தவர்.



லண்டன் பாராளுமன்றம்

டென்மார்க் தேசத்தில் 1910-ம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் நாள் மாதர் கூடி யமை, இன்று சர்வதேச உழைக்கும் மாதர் தின மாய், ஒளிவீசுகிறது. சமூக, பொருளாதார அர சியல், கலாசார உரிமைகள் யாவிலும் பெண்கள் சமபங்கு பெற்றுவிட்டார்கள். பிரித்தானியாவில் மூன்றும் முறையும் பழைமைபேணும் கட்சியினரின் தலைவி தாட்சர் அம்மா பிரதமராய் டவுணிங் வீதி பத்தாம் இலக்க மாளிகையை அலங்கரிக்கிறார். இவ ரின் ஆட்சி நடைபெறும் பாராளுமன்றம் அழகான பெரிய மாளிகையாகும்.

★ மாதர் சிறப்பிதழ் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

### சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம்
திருக்கோளிலி
பண் - நட்டராகம்
திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியேன் உமை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்
சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித் தரப்பணியே.

திருச்சிற்றம்பலம்

திருக்கோளிலியிலே எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே, வாள்போலுங் கண்களையுடைய மடவாளாகிய என் மனைவி தனது வாழ்க்கையை நடத்த முடியாது வருந்தியபோது தேவரீர் குண்டையூரில் நெல் தந்தருளினீர். அவற்றை என் மனைவியிடம் சேர்ப்பிக்க எனக்கு வேலையாள் வசதியில்லை. அடியேன் என்றும் தேவரீரையே வணங்குந் தொழிலை உடையவன். அடியேன் வேறு யாரிடம் வேண்டுவேன்? அவற்றை அவளிடம் சேர்ப்பித்து உதவுவதற்குத் தேவரீர் எவர்க்கேனும் கட்டளையிட்டருள்வீராக.

### சிக்கனத்தில் சிக்கனம்

மில்க்வைற் மேலுறைகள் பெறுமதியானவை. காசுத்தாள் போல அவை பண்டம் வாங்கப் பயன்படும். தொப்பி, கொப்பி, துவாய், பெற்சீற், ஸ்ரிக்கர், தமிழ் நூல்கள், மில்க்வைற் செய்தி போன்ற பண்டங்கள் வாங்குவதற்கு மில்க்வைற் மேலுறைகள் பெறுமதி வாய்ந்தவை.



## திருவள்ளுவர்

## திருக்குறள்

### குறிப்பறிதல்

(பிறர் எண்ணத்தை அவர் கூறுவதன் முன்னமே குறிப்பால் அறிதல்)

" குறிப்பின் குறிப்பு உணராஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்."

குறித்ததைக் காணவல்ல கண்ணினுல் பிறர் உள்ளக் குறிப்பை அறியாவிட்டால், உறுப்பினுள் சிறந்த அக் கண்ணினுல் ஆம்பயன் என்னை?

**Reading other's mind**

Of what use are eyes among the organs of the body if they cannot read the mind from the look?

## 1987 யூலை மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | புதன் | — | மாவிட்டபுரம் கொடி<br>மாணிக்கவாசகர் குருபூசை |
| 2. | வியாழன் | — | நடேசர் அபிஷேகம் இரவு |
| 3. | வெள்ளி | — | நடேசர் ஆனி உத்தரதரிசனம்<br>தம்பலகாமம் கொடி<br>இரவு 9-33 அட்டமி |
| 4. | சனி | — | அட்டமி - நவமி<br>மேரிகியூரி நினைவு |
| 5. | ஞாயிறு | — | இரவு 8-55 வரை நவமி |
| 7. | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 8. | புதன் | — | பிரதோஷவிரதம் |
| 10. | வெள்ளி | — | பூரணைவிரதம் |
| 11. | சனி | — | சுவாமி சிவானந்தர் தினம் |
| 15. | புதன் | — | கலட்டி அம்மன் கொடி |
| 16. | வியாழன் | — | தட்சிணயன புண்ணியகாலம் |
| 17. | வெள்ளி | — | ஆடிப்பிறப்பு<br>இரவு 8-06 அட்டமி<br>சீனிவாச சாஸ்திரியார் நினைவு |
| 18. | சனி | — | அட்டமி நவமி |
| 19. | ஞாயிறு | — | நவமி இரவு 7-08 வரை<br>விபுலானந்தர் நினைவு |
| 20. | திங்கள் | — | கார்த்திகை விரதம்<br>சாரதாதேவியார் தினம் |
| 21. | செவ்வாய் | — | ஏகாதசிவிரதம்<br>கவி. தேசிக விநாயகம்பிள்ளை தினம் |
| 23. | வியாழன் | — | பிரதோஷவிரதம் |
| 25. | சனி | — | ஆடி அமாவாசை<br>கதிர்காமம் கொடி |
| 29. | புதன் | — | ஆடிப்பூரம் |
| 31. | வெள்ளி | — | திலகர் தினம் |

★ மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம் ★

## ஆதிரை

கற்பின் கொழுந்தாய் விளங்கிய இவளை அக்கினிக் கொழுந்து சுடவில்லை. இவளின் கணவன் சாதுவன் இறந்தபின், மீண்டுவரச் செய்த கற்பினள். கோவலன் மகள் மணிமேகலை அறஞ்செய்வதற்கு அட்சய பாத்திரம் பெற்றவள். அட்சய பாத்திரம் எடுக்க எடுக்கக் குறைவு படாதது. அதற்கு மூலபலம் இட்டவள் ஆதிரை. மணிமேகலை அவளிடமே முதலிற் பிச்சை எடுத்தாள். "பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக" என்னும் வாழ்த்துக் கூறி அப்பதிவிரதை பிச்சையிட்டாள்.

## இடும்பி

அரக்கியேயானாலும் அழகிலும் அறிவிலும் சிறந்தவள். கணிதம் வல்ல இவள் காலக் கணிதத்தில் திறமையுள்ளவள். கமலக் கன்னி எனவும் பெயர் பெற்றவள். பாண்டவர் வனவாசத்தின்போது இடும்பன் வனத்தில் தங்கினர். வீமனும் இடும்பனும் போர் புரிந்தபோது இடும்பன் மாளவே, இடும்பி வீமனைக் காதலித்து வாழ்ந்து கடோற்கசன் என்னும் வீரனைப் பெற்றாள்.

## இலக்குமணை

துரியோதனனின் மகள். இவளின் சுயம்வரத்தில் பலராமனின் மகன் சாம்பன் இவளைத் தூக்கிப் போனான். விடமாட்டோம் என்று நூற்றுவரும் உதவியாளரும் படை எடுத்தனர். பலராமர் தமது படைக்கலமான கலப்பையைத் தூக்கினார். கும்பிட்டோம் சாமி உயிர் தந்தாற்போதும் என்று கௌரவர் பின்வாங்கி ஓடினார்கள்.

## பேசாமடந்தை

பிரான்ஸ் நாட்டுப் புகழ்பெற்ற எழுத்தாளர் ஏழை படும்பாடு எழுதியவர், விக்ரர் ஹியூசோ. இவரின் புதல்வி அதெலே என்பாள் அல்பிரெட் பின்சன் என்னும் பிரித்தானிய படைவீரனைக் காதலித்து வாழ்ந்தாள். அந்தப் படைவீரன் இவளுடைய செல்வத்தைச் செலவழித்து இவளைக் கைவிட்டு விட்டான். மனமுடைந்த அதெலே அன்று தொடக்கம் எவருடனும் எதுவுமே பேசாமல் வாழ்ந்தாள். பெரும் புலவரான தந்தையார் 35 ஆண்டுகள் பேசுவிக்க முயன்று முடியாமல் தவித்து மறைந்தார். இவள் மேலும் முப்பதாண்டுக்காலம் பேசாமலே வாழ்ந்து மறைந்தாள். இவள் பேசாமல்விட்ட ஆண்டு 1850. மரணமடைந்த ஆண்டு 1915. பேசாமடந்தையாயிருந்த காலம் 65 ஆண்டுகளாகும்.

## அந்த ஆண்டு

சேர். இராமநாதன் பரமேஸ்வராலயத்தைக் கட்டிக் கொண்டிருந்தார். டொனமூர் அரசியற் குழுவினர் இலங்கை அரசியல் யாப்பை மாற்றுவதற்குத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார்கள். பண்டிதமணி கணபதிப்பிள்ளை தமிழாசிரியராவதற்குக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்திருந்தார். முன்னர் 1833ஆம் ஆண்டு முதல் நிலவி வந்த இலங்கைச் சட்டசபை அங்கத்தவகள் இந்த ஆண்டு முதலாகவே சலுகைப்பணம் பெறத் தொடங்கினார்கள். பீம் வயர்லெஸ் என்னும் கம்பியில்லாத் தொலைபேசித் தொடர்பு இலங்கைக்கும் இங்கிலாந்துக்குமிடையில் உண்டானது.

உலகப் புகழ்பெற்ற உத்தமர் காந்தியடிகள் யாழ்ப்பாணத்தாரின் - இளைஞர்களின் அழைப்பை ஏற்று வருகைதந்து இலங்கையெங்கும் சுற்றினார். இங்கிலாந்துப் பெண்களைப்போல எங்கள் நாட்டுப் பெண்களும் வாக்குரிமை பெறுவதற்குச் சங்கம் அமைத்தார்கள்.

மனிங் ஆள்பதி திருத்தியமைத்த சட்டசபையில் தமிழர் எண்மர் தலைப்பாகை அணிந்து அலங்கரித்தார்கள். அவர்களுள் சிலர் உத்தரியமும் அணிந்து மணவாளக் கோலம் பொலியக் கொலுவிருந்தார்கள். சுதேச வைத்திய சபை என ஒரு நிறுவனம் உருவாவதற்கு முயற்சிகள் நடைபெற்றன. இலங்கை நீதிபரிபாலனத்தில் ஐந்து நீதியரசர்கள் இருந்த இடத்தில் ஆறுமவருக்கும் இடம் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் வாழ்ந்த முருகேசர் கந்தையா என்பவர் முதன்முதலாக நீலம் கலந்த சவர்க்காரத்தைக் குடிசைத் தொழிலாக ஆரம்பித்து, ஆங்கிலேயரின் இறக்குமதியோடு போட்டிக்கு விட்டார்.

மனைவி மீனாட்சிப்பிள்ளை கையால் உருட்டிப் பேளை போல உருளவிட்ட சவர்க்காரம் நாளடைவில் கட்டியாக வெட்டப்பட்டது. நீலக்கட்டி எனப் பெயர் பெற்றது.

இன்றைய தொழிலதிபர் கனகராசா அவர்கள் பிறந்ததும் அந்த ஆண்டுதான். நீலக்கட்டியும் கனகராசா அவர்களும் கூடிப்பிறந்த இரட்டைப் பிள்ளைகளே. அறுபது ஆண்டுகளுக்கு முன் நிலவிய பிரபவ ஆண்டு இன்று மீண்டு வந்து மணியோசை எழுப்புகிறது. இது மணிவிழா ஆண்டு.

## வாழ்க்கைத் துணை

அர்த்தநாரி, பாகம்பிரியாள், சகதர்மினி, மனைத்தக்காள், தர்மபத்தினி வாழ்க்கைத்துணை, பதிவிரதை, இல்லத்தரசி, மனையாள், வீட்டுக்காரி என்றெல்லாம் புகழ் பெற்ற பெண்; ஆணின் அரைப்பங்கினள் என்பதோடு மிக நல்ல பங்கினளாவள். அவளின்றி ஆண் அசையமாட்டான். அவள் மனசுக்குச் சாந்தி தருபவள், மகிழ்ச்சி தருபவள், உற்சாகம் தருபவள், ஊக்கந் தருபவள், ஏன் வலிமையும் தருபவள். "சக்தி இருந்தால் நீ இதைச் செய். இல்லையேல் சிவனே என்று சும்மா இரு" என்று நாடோடியாகச் சொல்வார்கள். சக்தியின் உருவம் பெண்.

## எய்தவன் இருக்க

எய்தவன் இருக்க அம்பை நோவக்கூடாது. ஏவற்பேய் கூரையைப் பிய்க்கும். அணுக்குண்டு போட்ட பாதகர்கள் அதனைக் கைவிட்டுவிட்டார்கள். ஜலவாயுக் குண்டு தயாரித்தவர்கள் அதைப் போடவில்லை. விஷவாயுக்குண்டுகள் தாமாக விழவில்லை.

★ வீட்டுக்கு இலட்சுமியானவள் பெண் ★

## ஆபாச உடையும் அலங்கோல உடையும்

அம்மா தாயே உன் காலில் விழுந்து கேட்டுக்கொள்கிறேன், நீ ஆபாச உடை அணியாதே, உன் பெண்களுக்கு அலங்கோல உடைகள் அணியாதே. நாகரிக உலகம், பண்பாட்டு உலகம், சீரிய உலகம், சகிக்கமாட்டாத உடையலங்காரங்கள் இன்று உலாவருகின்றன. எந்த மிலேச்சரும் அணியாத உடையை நம்மவர் கூச்சமில்லாமல் குதூகலமாக அணிகிறார்கள். இந்த உடைகளைத் தைப்பதற்குச் செலவு கூட என்று அறிந்தும், எங்கள் நாகரிகமல்ல என்று அறிந்தும், ஏதோ ஒருவித மோகத்தினால் இதை அணிகிறார்கள். போனது போகட்டும். இனிமேலாவது ஆபாச உடையும் அலங்கோல உடையும் அணிய மாட்டோம், அணியவிடமாட்டோம் என்று சங்கற்பம் எடுத்துச் சால்பைக் கவனிப்போமாக.

## விதி விளையாடும்

இரண்டு புறாக்கள் மகிழ்ச்சியாகக் குறுகுறுத்துக் கொண்டிருந்தன. இரண்டையும் ஒரே அம்பினால் கொன்று வயிற்றை நிரப்புவதற்கு வேடன் வில்லை வளைத்து அம்பையும் வைத்தான். மேலே பெரிய பருந்து புறாக்களை வறுகிக்கொண்டு பறப்பதற்கு வட்டமிட்டுக் கீழே இறங்கிற்று. வேடன் தயாரானான், பாவம் அருகில் ஊர்ந்துவந்த பாம்பு அவன் காலில் கடித்தது. அவன் விட்ட அம்பு குறிதவறிப் பருந்தைக் கொன்றது. வேடனும் விடமேறி இறந்தான். புறாக்கள் குறுகுறுத்தன. விதியப்பா, விதி!

## எண்ணெய் முழுக்கு



ஆறுமுகநாவலர் அவர்களுக்குப்பின் எண்ணெய் முழுக்கின் அவசியத்தை வற்புறுத்தித் தாமே வாரம் இருமுறை முழுகி வரும் விசுவநாதன் அவர்கள் எண்பதுக்கு மேல் வாழ்கின்றார். பட்டப்படிப்பின்றிப் பல கலைகளறிந்த பெரியவர் பேரறிஞர் இவர். ''எண்ணெய் தேய்த்துக் குளிப்பது அவசியம். வெப்ப பூமியில் முழுக்கு அவசியம் என்று சித்தவைத்தியம் கூறுகிறது'' என்கிறார்.

## கற்புடைய பெண் அமிழ்து

பழைய சோழப் பேரரசர்களுள் பெரியவன் கரிகாற் பெருவளத்தான். அவன் மகள் ஆதிமந்தி. இவளை மணந்தவன் சேரன் ஆட்டனத்தி. அவன் ஒருநாள் காவிரிப் பெருக்கில் நீந்தி விளையாடினான். அவ்வேளையில் உண்டான நீர்ச்சுழல் அவனை இழுத்துக்கொண்டுபோய்க் கடலில் சேர்த்தது. தன்னருகில் விளையாடிய கணவனைக் காணாத ஆதிமந்தி அலறி அழுது காவிரிவழியே ஓடிச் சென்று கடற்கரையில் நின்று கதறினாள். கல்லும் கரையும் வண்ணம் அவள் கதறியழுதமை கேட்டு எல்லோரும் உருகினர். அது கண்ட மருதி என்பாள் ஒருத்தி எங்கிருந்தோ வந்து ஆட்டனத்தியை மீட்டுவந்து ஆதிமந்தி முன் நிறுத்தினாள். வாழ்க்கைத் துணை நலம்.

கற்பினையுடைய பெண் தன் கணவனுக்குச் சாவா மருந்தாவள். பதிவிரதையை மனைவியாகக் கொண்ட கணவனுக்கு அவமிருத்து இல்லை. ஆதிமந்தி சங்ககாலப் புலவர்களில் ஒருத்தி. இவள் பெருமை அகநானூறு என்னும் தொகுப்பில் பல பாடல்களில் வந்துள்ளது.

## பெண் துறவியின் பெருஞ் சாபம்

கோவலனும் கண்ணகியும் சோழநாட்டைவிட்டுப் பாண்டிநாட்டிற்குப் போனார்கள். வழியில் கவுந்தி அடிகள் என்னும் பெண் துறவி இவர்களுக்குத் துணையானார். எல்லோரும் ஒரு சோலையில் ஆறியிருந்தனர். அவ்வழியால் வந்த கணவனும் மனைவியுமான இருவர், இவர்களைக் கண்டு, ''மன்மதனும் இரதியும் போன்ற இவர்கள் யாவர்?'' என்று கேட்டனர். அதற்குக் கவுந்தியடிகள் சுருக்கமாக, ''என் மக்கள்'' என்றார். ''உம்மக்கள் இருவர் மனைவி கணவன் போல மகிழ்ந்திருக்கலாமோ?'' என்று கேட்டனர். பெருங் குணச்செல்வியாய கவுந்தி அடிகளுக்குக் கோபம் வந்தது. அவர் சாபமிட்டதும் வம்பர்கள் நரிகளாயினர். இதைக்கண்டு புலம்பிய கண்ணகி கவுந்தி அடிகளை இரந்துநின்றாள். அவர் கோபம் தணிந்து, சாபத்தை நீக்கிவிட, நரிகள் மீண்டும் மனிதராயினர்.

## The blessing of having a good partner in life

She is the help-mate who has the virtue of the house-wife and who regulates her life according to her husband's income.

Whatever blessings there may be, should the wife be without the virtues of the house-wife, there could be no happiness.

Among the acquisitions, what is there more precious than a wife, provided she has the steadfastness of chastity?

She is the wife who guards herself looks after her husband with love, and never tires of keeping her reputation high.

The virtue of a wife is reckoned as a blessing to have good children is esteemed as an ornament.

—Thiruvalluvar

No washing is complete without
MILK WHITE BLUE SOAP

★ வாழ்வுப்பாதையில் வழித்துணை பெண் ★

## மாக்கோதை மணந்த பெருங்கோப்பெண்டு

சேரநாட்டின் கருவூரில் இருந்த பெரிய மன்னன் மாக்கோதை. அவன் மனைவி பெருங்கோப்பெண்டு. பெருங்கோப்பெண்டு அழகியாய், அறிவுள்ளவளாய், பணிவுள்ளவளாய், தாயன்பு மிக்கவளாய், மன்னனுக்கு மந்திரியாய் இருந்தாள். அரசன் கவலையில்லாமல் பெருமிதத்தோடு அரசாண்டு வந்தான்.

இவ்வாறாக விதிவசத்தால் பெருங்கோப்பெண்டு நோயுற்று இறந்தாள். அவளை மயானத்தில் சேர்த்த பின், மன்னன் நகரத்து மீளமனமில்லாமல் அங்கே மரத் தோப்பில் அவள் நினைவாகவே இருந்து இறந்தான்.

## கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி

சான்றாண்மைபற்றிச் சொல்லவந்த நல்லாதனார் தமது திரிகடுகம் என்னும் நீதிநூலில் இறுதிப்பகுதியில் மாதம் மும்மாரிக்கு வித்து எவையெனப் பாடியுள்ளார். அறிவுடைய அந்தணர் அறத்தை நினைத்து ஆவன செய்தல், அரசன் நீதிமுறை தவறாது ஆட்சிசெய்தல், பெண்கள் கணவன் வழியொழுகுதல். இம்மூன்றும் திங்கள் மும்மாரிக்கு வித்து.

திரிகடுகம் உள்ளிட்ட பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுக்கு முற்பட்டதாய புறநானூறு பண்டைத் தமிழர் வாழ்வைப்பற்றிக் கூறும்.

தமிழர் வாழ்வில் மலர்ச்சிக்கு அடிப்படை பெண்களே. பெரிய கூந்தலும் சிறிய நெற்றியுமுள்ள பெண் மிகச்சுருக்கமாகக் குறைவாகவே பேசினாள். ''சிலசொல்லிற் பல கூந்தலின் நிலைக்கொத்த நின் துணைத்துணைவியர் தமக்கமைந்த தொழில் கேட்ப'' என்று ஆலூர் மூலங்கிழார் கௌணியன் விண்ணந்தாயனைப் புகழ்ந்துள்ளார்.

பெண்கள் குறைவாகப் பேசி நிறைவாகப் பணிபுரிதலைக் கிரேக்க நாகரிகமும் கொண்டாடுகிறது.

டெமோகிரிடெஸ் என்பார், குறைவாகப் பேசுதல் பெண்ணின் சிறந்த ஆபரணம் என்பர்.

ஒருசமயம் புத்திப் பரீட்சையின்போது, பெண்கள் மிகக்குறைவாகப் பேசுவது எப்போது என்று கேட்டார்கள். பலரும் பலவிதமாக விடை எழுதினர்கள். மரணச் சடங்கில், நோயுற்ற வேளையில், துன்பம் வந்தபோது என்றெல்லாம் விடைகள் குவிந்தன. சரியான விடை இவையல்ல. அது ''பெப்ருவரி மாதத்தில்'' என்பதாகும். இவை தமிழ் நாகரிகத்தைச் சேராத விளு விடையாகும். தமிழ்ப்பெண் என்றுமே சுருக்கமாகப் பேசுவாள்.

பெண்கள் குறைவாகப் பேசி நிறைவாகக் கடமை செய்த பண்பாட்டுச் சந்தர்ப்பம் இதுவாகும். சோழநாட்டுப் பூஞ்சாற்றூர் அந்தணன் கௌணியன் விண்ணந்தாயன் செய்த வேள்வியின்போது, பெண்கள் சகல வேலைகளையும் அலுப்பின்றிச் சரிவரச் செய்தமையாகும். இதையே மூலங்கிழார் பாடிப் புகழ்ந்தார், அப்பெண்கள் ஆகுதியில் பெய்த நெய்யின் பெருக்கமும் வந்தவர்களுக்கு வரையாது கொடுத்த விருந்தின் பெருக்கமும் பெரிது பெரிதென்று போற்றுவர்.

## வள்ளுவன் கண்ட வாழ்க்கைத் துணைநலம்

உயர்ந்த பண்புடையவளாய்க் கணவனின் வருவாய்க்குத் தக்கதாக வாழ்வை நடத்துகின்றவள் இல்வாழ்க்கைக்குச் சிறந்த துணையாவள். மனைக்குச் சொந்தமாய் மனைக் கிழத்தி என்னும் இல்லாளிடம் சிறப்பியல்பு இல்லையாயின் பிற சிறப்புகள் மாட்சிமைப்படா. மனைவி சிறப்புடையவளானல் எல்லாச் சிறப்புகளும் வந்துசேரும். மனைவியிடம் கற்பு என்னும் கலங்கா நிலைமை இருக்குமாயின் பெண்ணிற் பெரியவர் எவருமிலர். அவள் தன்னையும் தன் கணவனையும் காத்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளவள். அவள் கடமை தவறாதவள். மறதி இல்லாதவள். தளர்ச்சி இல்லாதவள். அவள் நிறை என்னும் மன உறுதியினல் சாதனை புரியத்தக்கவள். மனைவியின் மாண்பே வீட்டுக்கு மங்கலம். மங்கல மடந்தைக்கு நல்ல ஆபரணங்கள் மாசு மறுவில்லாக் குழந்தைகள்.

## தமக்கையாரால் சிறந்த தம்பியார்

தம்பியார் உளராதல் வேண்டும் என்று தயாவைத்த தமக்கையார் அவர். தம்பியார் மருணீக்கியார் பௌத்தம், சமணம் ஆகிய இரு மதபோதனைகளையும் நன்றாகக் கற்று, பௌத்த மதத்தைத் தருக்கரீதியில் வென்று சமணத்தை நிலைநாட்டித் தருமசேனர் எனப் புகழ் பெற்றார்.

சமணருடைய போக்குப் பிடியாமல் தமக்கையாரை நினைந்து சென்று, வீழ்ந்து வணங்க, தாயன்பு தழைத்த தமக்கையார், தம்பியாரை மனிதராக்கினர். சமணரில் மேலாளராயிருந்த தருமசேனர், தமக்கையார் உபதேசத்தால் மனிதருள் பெரியவராகி அடியாராகி அப்பராகித் திருநாவுக்கரசு நாயனராயினர். அவருக்கு எல்லாமாயிருந்தவர் ஒரு அக்கா. அந்த அக்காவையும் தம்பியாரையும் தந்த வயிறு மாதினியார் என்னும் மாதரசியின் மணி வயிறு. மாதர் தவம் மாதவம். அப்பர் சிவபெருமானுக்கும் அப்பராயினர். என் அப்பன் என்னைப் பாடினன் என்பது சிவன் வாக்கு. அப்பர் வாக்கில் வாய்மை, வாழ்வில் தூய்மை, அன்பில் தாய்மை. இவை அக்கா பழக்கியவை.

## ஓர் இராணி
### ஆயிரக்கணக்கான வேலைகாரிகள்

அற்புதமான அரசு. இராணியை மையமாகக் கொண்டு பலவிதமான வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்யும் அத்தனை வேலைக்காரிகளும் அருமையான உழைப்பாளிகள். அந்த அரசாங்கத்தில் சோம்பேறித் தம்பிமார் தொகையும் உண்டு.

★ வற்றாத அன்புள்ளவள் ஒருவரின் தாய் ★



## அழகி பட்டபாடும் அகிலம் பெற்ற பேறும்

பெண்கள் எங்கே பிறந்தாலும் எங்கே வளர்ந்தாலும் அவர்கள் பதினாறாண்டுப் பருவத்தில் தனியழகு சோபிக்கப் பெற்றிருப்பார்கள். வெள்ளைக்காரர் இனிய பதினாறு என்று புகழ்வதும் அந்தப் பருவத்தையேதான்.

போலந்து நாட்டில் வார்சோ நகரத்தில் ஸ்குளோடவ்ஸ்கா குடும்பத்தில் நான்கு பெண்களும் ஒராணுமாக வளர்ந்த குழந்தைகளுள் மேரியா 7-11-1867இல் பிறந்தவள். தாயும் தந்தையும் சம்பளம் குறைந்த ஆசிரியர்கள்.

தாய் காசநோயால் இறந்துபோக, தகப்பன் சுதந்திரப் பேச்சில் ஈடுபட்டு வேலை இழந்துபோகக் குழந்தைகள் துன்பப்பட்டார்கள். தந்தையார் வீடுகள்தோறும் பாடம்சொல்லிக் கொடுத்துக் குடும்பம் நடாத்திவந்தார். பிள்ளைகள் படித்துவந்தார்கள். பெரியக்காவும் நோயுற்று இறந்துபோகவே, பத்துவயதுப் பெண்ணான மேரியா வீட்டு வேலையும் படிப்புமாக வளர்ந்தாள். சின்னக்காவும் அண்ணாவும் தங்கப்பதக்கம் பெற்றார்கள். மேரியா படித்துப் பதினாறு வயதில் வார்சோவில் படிக்கக்கூடிய உச்சப்படிப்பு முடிந்துவிட்டது. தங்கப்பதக்கம் பெற்றாகிவிட்டவேளையில் மேற்படிப்புக்கு பிரான்ஸ் நாட்டுக்கு போக ஆசை. இலக்கியம், சமூகக்கலை, விஞ்ஞானம் முதலியவற்றில் பெருமளவு ஆற்றல், ஈடுபாடு. வீடுகள்தோறும் பாடம் சொல்வதும், பெரிய வீடொன்றில் பணிபுரிவதும் உழைப்புக்கு வழி.

சொந்தநாட்டில் பிறந்த நகரத்தில் பெண்கள் பட்டப்படிப்புப் படிக்கலாகாது என்பது அன்றைய சட்டம். அது 1887 வரை நிலவியது. எனவே பத்தொன்பது வயதாகிவிட்ட மேரியா, கையில் சிறிதளவு பணம்சேரப் பிரான்சுக்குப் போக ஆயத்தம். இதற்கிடையில் இவள் பணிபுரிந்த பெரியவீட்டுக்காரனின் மைந்தன் பட்டப்படிப்புக்காரன். இவள்மீது காதல். இவளுக்கும் விருப்பம். ஆனால் பெரிய வீட்டுக்காரர் இணங்கவில்லை.

இந்தநிலையில் மேரி சின்னக்காவை மருத்துவம் படிக்கவைத்தாள். சின்னக்காவிலும் பார்க்க தான விவேகியாதலால் எந்தநேரமும் படித்துக்கொள்ளலாம் எனக் கருதினாள். சின்னக்கா மருத்துவம் பயின்ற இடத்தில் காதல்கொண்டு கரைசேர்ந்தாள்.

மேரியா வார்சோ நகரில் பாடஞ்சொல்லி வந்தாள். பிரான்சுக்குப் போகக் காலம் வந்தது. வயது 23 ஆயிற்று. பிரான்சுக்குப் போனதும் மேரியா என்பதை மேரி எனப் பதிந்துகொண்டாள். கணிதம், இரசாயனம் பௌதிகம், வானியல், கவி, சங்கீதம் யாவும் ஆர்வத்துடன் பயின்றாள்.

சின்னஞ்சிறிய அறையை வாடகைக்கு எடுத்து பாணும் தேநீரும் உண்டுவந்தாள். சிலவேளைகளில் சீனியில்லாமலே தேநீர் அருந்தியும் படிப்பில் ஆர்வங்காட்டினாள்.

எடி ஆத்தை! இரண்டு வருடம் ஒரே மூச்சில் படித்த அகோர வேகத்தில் பௌதிகத்துறையில் முதுமாணிப்பட்டத்தை முதற்பிரிவில் பெற்றுக்கொண்டார். அடுத்த ஆண்டில் கணிதத்துறையில் முதுமாணிப் பட்டத்தை இரண்டாம் பிரிவில் பெற்றார்.

இவளுடைய படிப்பும் உணவுத்தட்டுப்பாடும் இவளை மயங்கிவிழவும் வைத்தன. மூர்ச்சை தெளிந்தபோது பேராசிரியர் பியரி கியூரி விசிறிகொண்டு முதலுதவி செய்தவாறிருந்தார். அவரும் பெருமுயற்சியாளராக இருந்தமையால், அவர் காந்தம் பற்றி ஆராய்ந்துவந்தார். சிலவிதமான உருக்குவகைகளில் காந்தத்தின் தொழிற்பாட்டைக் கண்டறியுமாறு அவர் மேரியிடம் விடுத்தார்.

இருவருக்குமிடையில் காந்தம் பாய்ந்தது. அவரும் பெரும் படிப்பாளி. இவளும் முதுமாணி. இருவரும் ஒன்றாயினர். இவள் மேரி கியூரி ஆயினாள். இல்லற வாழ்வில் இனிய வாழ்வில் இதயமொன்றிய வாழ்வில் இரேணி என்னும் பெண்குழந்தை 1889ல் பிறந்தது.

குடும்பம் சிறக்கக் குழந்தை இரேணியைத் தந்த பெற்றோர், உலகம் உவப்ப ஒரு குழந்தையைப் பெறுதற்கு இரவுபகலாக உழைத்தனர். விந்தை புரியத் தொடங்கிய விஞ்ஞான உலகத்தில் தங்கள் பெயர் நின்று விளையாடும் வகையில் புதியது கண்டுபிடிக்கத் துடித்தனர். கதிர்மத்துக்குரிய முக்கிய கனிப்பொருட்களில் ஒன்றாய பிச்பிளன் என்னும் தாதுப்பொருள் ஓர் அந்தர் வாங்கிக் குவித்தனர். இது யூறனயிட் எனப்படும் பொருளாகும். யூறேனியம் இதன்மூலம் இதில் ஈயம், றேடியம் முதலியன கலந்துறையும், இது நிக்கல் செம்பு முதலியவற்றோடு கனிச்சுரங்கங்களில் கிடைப்பது. இது, கொங்கோ, கனடா கொலறாடோ முதலிய இடங்களில் பெருமளவு காணப்படுவது.

வசதிகுறைந்த ஆய்வுகூடத்தில் தாதுப்பொருளை நான்கு ஆண்டுக்காலம் உருக்கிவந்தார். சிரமத்தின் மேல் சிரமப்பட்டு உருக்கியவேளையில் அதியற்புதமான ஒளிவீசிய ஒரு பொருளைக் கண்டார். அது கடுகளவில் திரண்டது. பொலோனியத்திலிருந்து பிரிக்கப்பட்ட இந்தப்பொருள் றேடியம் எனப் பெயர்பெற்றது. மேரி கலாநிதிப்பட்டம் பெற்றார்.

★ உற்றார் உறவினரைக் கட்டியாள்பவள் பெண் ★

ஒக்சிசன் என்னும் பிராணவாயுவுக்குப் பின் றேடியம் கண்டுபிடிப்பு பெரும் புகழ்பெற்றது. மேரி மேதையாயினர். அவருடைய ஆய்வுக்கட்டுரை 1903ம் ஆண்டில் அகிலத்தை ஆச்சரியத்தில் மூழ்கவைத்தது. விஞ்ஞானவுலக வரலாற்றில் மேரி உச்சப்புகழ் பெற்றுர். நோபல்பரிசு இரண்டு முறை வந்து குவிந்தன. இருபது பல்கலைக்கழகங்கள் மனமுவந்து கௌரவ பட்டங்களைச் சூட்டி மகிழ்ந்தன. எண்பத்தைந்து விஞ்ஞான கழகத்தினர் அவரை உயர் உறுப்பினராகப் பதிந்து கொண்டாடின.

றேடியம் கண்ட இரகசியத்தைச் சொன்னல் கோடிக்கணக்காகக் குவிக்கலாம் என்று வந்தவர்களுக்கும் புன்முறுவலோடு இலவசமாக எல்லோரும் அறியுங்கள் இது உலகத்துக்குரிய குழந்தை என்றுர்.

அமெரிக்கர் அவரை அழைத்து இராசாங்க மரியாதை செய்தனர். அவருடைய கணவன் கியூரி பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பௌதிகத்துறை தலைவராயிருந்தார். அவர் 1906ஆம் ஆண்டில் வீதிவிபத்தில் அகால மரணமடைந்ததும் அவரிடத்தில் மேரி நியமனம் பெற்றுர். கடும் உழைப்பு அவருடைய உடம்பைத் தாக்கியது. அவர் 4-7-1934ல் காலமானுர். அவரின் கண்டுபிடிப்பு ஆயிரக்கணக்கானேரின் புற்றுநோயைக் குணப்படுத்திவருகிறது. அவரின் புதல்வி இரேணி நோபல்பரிசு பெற்ற விஞ்ஞானியானுர்.

## வழி நடத்தல்

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி

சோதி மலர்க் கொழுந்தே! — மணியே!
சொல்வது கேட்டிடுவாய்.

வீதி யருகினிலே — மணியே!
மெல்ல நடந்திடுவாய்.

வலது புறம் நடந்தால் — மணியே!
வண்டியுன் முன்வருங் காண்.

பலபக்கம் பாராதே! — மணியே!
பாதையைப் பார் நேராய்.

ஆட்டங்கள் ஆடாமல் — மணியே!
ஆறுதலாய் நடப்பாய்.

கைகோர்த்துச் செல்லாதே! — மணியே!
கதைகள் பேசாதே.

செய்வ தறியாமல் — மணியே!
திக்கெங்கும் ஓடாதே.

## மாதவி

கோவலன் கண்ணகி வரலாற்றை மக்கள் காப்பியமாக மன்னன் மகன் இளங்கோவடிகள் பாடியபோது, காப்பியத் தலைவர் வாழ்வில் திசை திருப்பஞ் செய்தவள் மாதவி. தலைசிறந்த ஆடற்கலை மடந்தையாயிருந்த மாதவி, ஐந்து வயதுமுதல் பன்னிரண்டாம் வயதுவரை கலைபயின்றவள். ஏழாண்டுப் பயிற்சியில் பொதுமக்கள் இரசிக்கும் பொதுவியலும், மன்னர்கள் மகிழும் வேத்தியலும் அறிந்தவள். அவளின் ஆடல் பாடல் வகைகளின் உயர்ந்த தரத்தை, அரங்கேற்றத்தின்போது தலைமை தாங்கிய மன்னன் கண்டு மகிழ்ந்து பெரும் பரிசு கொடுத்து வாழ்த்திப் பாராட்டியவன். அழகிற் சிறந்த அவளை அடைவதற்குக் கோவலன் பெருமளவு பொன் கொடுத்து இன்பம் துய்த்தான். கற்பிற் சிறந்த கண்ணகி, தன் காதற் கணவன் திருந்தித் தன்னிடம் திரும்பி வருவான் எனக் காத்திருந்தாள்.

அன்று கடற்கரையில் கோவலனும் மாதவியும் கானல் வரிப்பாட்டில் கருத்துவேறுபாடுகொண்டு பிரிந்தனர். கோவலன் கண்ணகியிடம் மீண்டதும், மாதவி அவன் மாலை வருவான், தவறினுல் மறுநாள் வருவான் எனக் காத்திருந்தாள், கடிதம் எழுதினுள். கோவலன் அசையவில்லை. அவன் மதுரை சென்று கொலையுண்டது கேட்டு மாதவி கலைகளை மறந்தாள், வாழ்வைத் துறந்தாள். அருமை மகள் மணிமேகலையையும் சிறுவயதிலேயே துறவறத்தில் தள்ளினுள். அவள் ஆறிய கற்பினள் எனப் புகழ்பெற்றுள்.

## மாந்தை நகரத்து மடந்தையர் மூவர்

ஈழவள நாட்டிலே இணையில்லாத திருக்கேதீச்சரத்தை உள்ளிட்ட மாந்தைப் பிரதேசம் மாதோட்டம் எனவும் வழங்கிய பெருநகரமாகும். நாகர் குலத்தவர் ஓவிய குலத்தவர் விசுவகர்மாவின் வழி வந்தவர்கள் வாழ்ந்த பெரும்பதி அது. சகலகலாவல்லுனராய கம்மியர் நெருக்கமாக வாழ்ந்த பதியில் காலந்தோறும் தோன்றிய பெண்களுள் மூவர் பெருஞ் சிறப்புப் பெற்றவர்கள். மண்டோதரி, சித்திர ரேகை, பதுமகோமளை எனப்பெயர் பெற்ற இவர்கள் முறையே இராவணன், குபேரன், சூரபன்மன் ஆகியோரின் மனைவியராவர். இவர்கள் பெருஞ் சிவபக்தைகள். தேவார திருவாசகமுடையார்களால் புகழப்பெற்ற திருநீற்றுச் செல்விகள், சிவவழிபாட்டினர்.

மண்டோதரி, வண்டோதரி, எனவும் வழங்க வாழ்ந்தவள். சிவபெருமான் தனக்குக் காட்சி கொடுத்தருள வேண்டுமென வழிபட்டவள். சிவபெருமான் திருவுத்தரகோச மங்கையில் பெருந்தொகையினரான முனிவர்களுக்கு ஆகமப் பொருளை உணர்த்தியபோது, குழந்தை உருவில் இவளுக்கு அருள் செய்தார்.

### மாதரி

சிலப்பதிகாரம் என்னும் கோவலன் கண்ணகி கதையில் வரும் ஆயர்பாடி முதுமகள் மாதரி. பெருங்குணங்களின் உறைவிடமான இப்பெருமாட்டியின் மகளே ஐயை.

மாதரி கௌந்தியடிகள் என்னும் பெண்துறவியிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தவள். கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிப் போனவழியில் வழித்துணையாய் வாய்த்த கௌந்தி அடிகள், அவர்கள் இருவரையும் மாதரியிடம் ஒப்படைத்தாள்.

மாதரி அவர்களுக்குத் தனியிடம் ஒதுக்கிக் கொடுத்துத் தன் மகள் ஐயையை அவர்களுக்குக் குற்றேவல் செய்யப் பணித்தாள்.

★ ஆதரவளிப்பதில் அன்புநிறைந்தவள் பெண் ★

கோவலன் கண்ணகி விதிவசத்தால் இறந்தமையைச் சகிக்காத மாதிரி, தவமுதாட்டி தன்னிடம் அடைக்கலமாகக் கொடுத்தவர்களை இறுதிவரை காப்பாற்ற முடியவில்லையே என வருந்தினாள். "தவத்தோர் அடைக்கலம் தான் சிறிதாயினும் மிகப் பேரின்பம் பயப்பதாகும்." என்பதை உணர்ந்த தமிழ்ப் பெண் அவள்.

### கங்கம்மாள்

வடநாட்டில் தீர்த்தத் தெய்வம் எனப் போற்றப் பெறும் இவளை வழிபடுவதால் உயிரினங்களுக்கு ஊறு உண்டாகாது எனக் கருதுவர். ஆண்கள் சிலர் பெண் வேடம் பூண்டு, கரகம் ஆடித் தானியம் சேர்த்து அவற்றைக்கொண்டு கங்கம்மாளுக்கு அவித்துப் படைப்பர். இந்த வழிபாட்டுமுறை சில ஆண்டுகளுக்கு முன் எங்கள் பிரதேசத்திலும் பெண்வேடம் பூண்ட ஆண் பூசாரிகளால் பின்பற்றப் பெற்றது.

## விக்ரோறியா

ஆங்கிலேயர் 1815 இல் கண்டியைக் கைப்பற்றிய பின் இலங்கை முழுவதற்கும் ஆட்சியாளராயினர். அவ்வாறாக மூன்றாம் ஜோர்ச் மன்னர் இலங்கைக்கும் அரசரானார். அவரின் ஒரு மைந்தராய கென்ட் கோமகனின் புதல்வி, விக்ரோறியா 24-5-1819 இல் பிறந்தார்; மூன்றாம் ஜோர்ச் 1820 இல் மறையவே மைந்தன் நான்காம் ஜோர்ச் மன்னரானார். இவருக்குப் பின் இவரின் தம்பியார் நான்காம் ஜோர்ச் அரசரானார். இவருக்குப் பிள்ளைப் பாக்கியமில்லாத காரணத்தால், சகோதரர் கென்ட் கோமகனாரின் புதல்வியே பட்டத்துக்குரியவரானார். எனவே இளமையிலேயே அரசியல் நுட்பங்களை நன்கறிந்து வந்த புதல்வி விக்ரோறியா தமது பதினெட்டாம் வயதில் 20-6-1837இல் இராணியானார்.

தமது உறவினரான அல்பேட் இளவரசரை 1840 ல் மணந்த விக்ரோறியா நான்கு ஆண்களுக்கும் ஐந்து பெண்களுக்கும் தாயானார். தாய்மைக்குணம் அதிகமுள்ள விக்ரோறியாவின் ஆட்சி நாளும் வளம்பெறவே அவர் பேரரசி என்னும் பெருங் கௌரவத்தையும் பெற்றார். பிரித்தானியாவுக்குப் பல நாடுகள் சொந்தமாக வந்து சேரவே அந்த நாடுகளின் அரசர்களுக்கெல்லாம் விக்ரோறியா தலைவியானார்.

இந்தியாவில் 1857 இல் ஒரு பெருங் கிளர்ச்சி நடைபெற்றது. அதில் கிழக்கிந்திய வர்த்தக சங்கம் பொறுப்புணர்ச்சி இல்லாமல் நடந்து கொண்டதாகக் கருதிய விக்ரோறியா ஆட்சிப் பொறுப்பைத்தாமே ஏற்றுக்கொண்டார். அதனால் பேரரசியானார் என்க.

அவருடைய காலத்தில் பிரித்தானியாவுக்குப் பெரிய சோதனைக்காலமாயிருந்தது. இந்தியர் கலகம், கிறிமியன் போர், சீக்கியர் கலகம், அங்கன் கிளர்ச்சி, பர்மிய கலவரம், பொக்சர் கலவரம், ஜூலூ, போயர் கலவரம், தென்னாபிரிக்கப் போர் முதலியன ஆட்சிக்காலத்தின் வளர்ச்சியைத் தடுத்தபோதிலும், அவர் தளராது ஊக்கமளித்து வெற்றி கண்டார்.

அவர்காலத்திலே கைத்தொழில் புரட்சி சுபீட்சங் காட்டியது. விஞ்ஞான விந்தைகள் வெளிக்கிளம்பின. இலக்கியம் வளர்ந்தது. அரசியல் சீராக நிலவியது. சமுதாய மலர்ச்சி மகிழ்ச்சியும் பொலிவும் தந்தது. தரமான பிரதமர்களும், மந்திரிமாரும் நற்போக்குள்ளவராய் வழி நடத்தினர்.

மெல்போன், பீல், பார்மஸ்ரன், டிசறலி, கிளாட்ஸ்ரன், சலிஸ்பரி முதலான மந்திரிகள் வரலாறு படைத்த பெரியவர்களாயினர். விக்ரோறியா இந்தியாவின் பேரரசி என்னும் மகுடப் பெயர்பெற்று மகிழ்ந்தார். தமது ஆட்சியின் பொன்விழாப் பொலிவை 1887இல் கண்டார். பின்னர் 1897 இல் வைரவிழாக்கண்டு பூரித்தார். அவருடைய மூன்றாந் தலைமுறைப் பேத்திமார் ஜேமனி, றஷ்யா நாடுகளில் சிம்மாசனம் ஏறி நாடுகளை இணைத்தனர்.

இரக்க மனமுள்ள அவர், எங்கள் சேர் முத்துக்குமாரசுவாமி அரிச்சந்திரன் நாடகம் நடித்து வேதியர் காலில் வீழ்ந்து கிடந்து அழுதபோது, மேடைக்கு ஓடிச் சென்று அவரைத் தூக்கி, "எழுந்திரு மகனே" என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார் என்றால் - தாயன்பு இருந்தவாறு.



## வேதவல்லி கந்தையா

பொதுப்பணி புரியும்போது பொதுவுடைமைத் தத்துவத்தில் ஒரு பூரணமான பொலிவு உண்டு. அவரிவர் என்று பாராமல் எல்லோரும் உயர்தல்வேண்டும் உய்தியடைதல் வேண்டும் என்று பணிபுரிதல் ஒரு தனி ஆற்றல். மாதர் நிலைமையை முன்னேற்றி, வாழ்வளிப்பதில் துறைகள் பழக்குவதில், சேவைசெய்வதில் ஒருபெண் முன்னோடியாகச் செயற்படுகிறார் என்றால் வலிகாமம் கிழக்குப்பகுதியின் பெருமையாகும். இவரின் சேவைநலம் கண்டு அரசாங்கம், அறிஞர்கள் பட்டங்கள் கொடுத்த வேளையில், மில்க்வைற் தொழிலதிபரும் சமுகமளித்து, சேவாரத்தினம் எனப் பட்டமளித்துப் பாராட்டினர். திருவாட்டி வேதவல்லி கந்தையா அவர்களின் சேவை வெல்க.

**Milk White Products are successful choice everywhere**



## தங்கம்மா அப்பாக்குட்டி

எங்கள் காலத்தில் பெண் ஒருத்தி அழகும் பொருளும் இருந்தும் ஆசிரியைப்பணி புரிந்தும், இல்லறத்தை விரும்பாது இறைபணி புரிந்து சைவம் தமிழ் வளரப் பேசியும் எழுதியும் வருகிறார். தம்மூர், தம்நாடு, என்னும் வரம்பு கடந்து, தமிழகம், மலேசியா, இங்கிலாந்து முதலிய நாடெங்கும் பணிபுரிந்துவருகிறார். ஓரளவு பிரபலிக்கமுற்றிருந்த அம்மன் கோவில் ஒன்றைப் பெருமளவில் பிரபலிக்கமுறும் வகையில் நல்லவர்கள் பெரியவர்கள் நடுவிலமர்ந்து பணிபுரிகிறார். இவருடைய தலையாய பணிகள் பல. காரிய நிர்வாகசபையினர் இவர் கருத்துக்கு முற்றும் இணங்கி முன்னின்று உழைப்பதற்குக் காரணமாய் இவரின் அடக்கமும் பணிவும் இறைபக்தியும் வழிகாட்டுகின்றன. அன்புவழிகாட்டத் திண்ணனூர் திருக்காளத்தி மலையேறினார் என்பது பெரியபுராணம். நற்குணங்கள் வழிகாட்ட நற்கருமங்கள் நிறைவேறுகின்றன. கன்னியென வாழும் அம்மையார் ஐம்பது பெண் குழந்தைகளை அண்மையில் தத்தெடுத்து அன்னையாய் அரவணைக்கிறார். பிள்ளைகள் தூய்மையாய்ச் சைவ வாழ்வு வாழ்ந்து கோயிற் பிணைப்பிள்ளைகளாய் மலர்கிறார்கள். பணிசெய்ய விரும்புபவர்களுக்குத் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் ஒரு மையம்.

## சொர்ணம்

இலைமறை காய்போல் இருந்து இல்லறமாய நல்லறத்தை இனிது நடத்திக்காட்டிய சொர்ணம் தமது ஐம்பத்து மூன்று வயது வாழ்வில் முப்பது ஆண்டு இல்லறம் காத்துப் பூவோடும் பொட்டோடும் இறைவனடி சேர்ந்தவர். இரு பெண்களுக்குத் தாயாகித் தன்னைக் கவனிக்காது அயலவர், உறவினர், அதிதிகள், எந்தநேரத்தில் உதவிகேட்டாலும் அள்ளிக் கொடுத்து ஆதரவுகாட்டியவர். நகரத்து வாழ்வறியாமல் நாட்டுப்புறத்தில் ஆரம்பக் கல்வி மாத்திரம் பயின்ற இவர், பழையகாலத்து மனைவிளக்காக வாழப்பழகியவர். இவர் மனையறங்காத்த மாண்பின் பயனாக இவர் கணவன் புத்தக வியாபாரியாய்ப் பெருமளவில் உயர்ந்தவர். புத்தக வியாபாரியாய்ப் பிரசுரகர்த்தாவாய் தருமந்தெரிந்தவராய் வாழ்ந்து வரும் திரு. ஆ. சுப்பிரமணியம் அவர்கள் சொர்ணம் அவர்களின் அன்புக்கணவன். மனைவிளக்கு ஒளிவீசியவாறு.

## விளக்கு ஏந்திய வீரி

இங்கிலாந்தில் நைற்றிங்கேல் என்னும் பறவை இனிய குரலிற் பாடுமியல்பினது. வானம்பாடி எனவும் அதைக் கூறுவர். இங்கிலாந்தில் புளோறென்ஸ் என்பது ஒரு நகரம். அங்கே செல்வர்கள் குடும்பத்தில் 1820ல் பிறந்த செல்விக்கு புளறென்ஸ் நைற்றிங்கேல் என்பது பெயராயிற்று. இளமையிலே இரக்ககுணமுள்ள அப் பெண் பாரம்பரியக் கட்டுப்பாட்டை மீறி, கைசவர்த் என்னும் நகரிலும் பாரிஸ் நகரிலும் நேர்ஸ் வேலை பயின்றார். அவர் 1854ஆம் ஆண்டில் தன்னைப்போன்ற நங்கையர்களைக் கூட்டித் தாங்கள் மனிதாபிமானமுள்ள சேவையை மகத்தாகச் செய்ய முற்பட்டனர். அக்காலத்தில் நடைபெற்ற கிறீமிய போரில் காயமுற்றோரின் துன்பந் துடைத்துக் குறையுயிரில் கிடந்தவர்களுக்குக் குற்றேவல் புரிந்தார். நோயாளிகளை ஓய்வில்லாமல் சென்று பார்ப்பதற்குத் தன்கையில் அணையாவிளக்கு ஏந்தினார். அவருடைய நிழல் சுவரிலாவது, நிலத்திலாவது விழக் கண்ட நோயாளிகள் அதனை முத்தமிட்டு அவரைத் தெய்வமாகத் தொழுதனர். அவர் 1856ல் நேர்ஸ்மாரைப் பழக்கும் செள். தோமஸ் கல்லூரியையும் கிங்ஸ் கொலிஜ் ஹொஸ்பிற்றல் என்னும் தாபனத்தையும் நிறுவிப் பணிபுரிந்தார். அவர் காலம் 1820 — 1910 ஆகும்.

## ஓர்லியன்ஸ் மாது


ஆங்கிலேயர் பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியை முற்றுகையிட்டிருந்த காலத்தில், சமயப்பற்றுள்ள நாட்டுப்புற நங்கை ஒருத்தி, தனக்குத் தெய்வக்குரல் கேட்டதாகவும், தான் பிரான்ஸ் நாட்டை விடுவிக்கப்போவதாகவும், 10,000 வீரரை நடத்திச் செல்லப்போவதாகவும் ஏழாம் சாள்ஸ் மன்னனிடம் அனுமதிபெற்றுச் சென்றாள். வீரவாள் ஏந்திக் குதிரையேறிச் சென்றவள் ஆங்கிலேயரைத் துரத்தியடித்து வென்றாள். ஆனால் பேகண்டி மக்கள் அவளைப் பைத்தியகாரியெனப் பிடித்து, ஆங்கிலேயரிடம் கொடுப்ப, அவர்கள் இரக்கமின்றிச் சந்தை மைதானத்தில் தீ கொளுத்திக் கொன்றனர். அவ்வீரப் பெண்ணின் காலம் 1412—1431 ஆகும். பின்னர் அவள்மீது விதிக்கப்பட்ட குற்றச்சாட்டு, பதிவிலிருந்து நீக்கப்பட்டது. காலம் சென்றபின், 1920ஆம் ஆண்டில் அவள் செயின் பதவியில் பதியப்பெற்று சென் யோன் ஒவ் ஆக் என வழங்கினாள்.

### மகராசி

மக்கள் ஆட்சிக் காலத்தில் வீட்டுக்காரி என உள்ளவர்கள், இல்லறத்தை நல்லறமாக்கவும் நங்கையர்கள் எல்லோரும் மகராசியாய் மலர்கிறார்கள். தெருப்பாடல் ஒன்று காதில் விழுகிறது.

“ மக்களைப் பெற்றெடுத்த நல்ல மகராசி நீயும்
வாழ்ந்திடுவை மக்களெல்லாம் வளர்வர் சுகம் பெறுவர்;
பிற்கினைக்குப் புண்ணியமும் பெருகும் பெரியம்மா!
பேதைவயிறார அன்னம் பெய்திடுவை பெரிதே! ”

★ தன்னையொறுத்துப் பிறரை வளர்ப்பவள் பெண் ★



# தருகை சிறப்பது தடாதகையாலேதான்

மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள் சிவ தர்மவள்ளல் எனப் புகழ்பெற்றவர். அவர் பன்முகப் பணிகளுக்குத் தம்மாலானவகையில் இயன்றளவு உதவுபவர், கொடுப்பவர். அவருடைய கொடுக்கும் கை நீண்டதுதான். தசரதர் கொடுத்தலால் கைநீளப்பெற்றவர் என்பதைக் கம்பர் தருகை நீண்ட தசரதர் எனப் பாடுவர்.

தொழிலதிபரின் தருகை நீண்டதற்குக் காரணம் இன்னொரு கை. அது அவருடைய மனைவியார் நாகம்மா அவர்களின் தடாதகை.

சிவபெருமான் வேண்டுவார் வேண்டியதைக் கொடுத் தருள்புரியும்போது, தேவியார் தடாத மனப்பான்மையில் உடனுதரவு நல்குவதால் உமாதேவியாருக்குத் தடாதகைப்பிராட்டியார் என்று திருநாமம்.

தருகையும் தடாதகையும் வாழ்க.

## அல்லி

ஆணரசு ஆண்டால் அழிந்துபோம் சீமை என்று, பெண்ணரசாளப் பிறந்தாளே அல்லியம்மாள் என்று மக்கள் காப்பியமாய அல்லியரசாணி பாடும். சித்திர வாகன் என்னும் பாண்டியன் மகளாய்ப் பிறந்து, கல்வி, வில்வித்தை குதிரையேற்றம் முதலியனவெல்லாம் கரை கண்ட இவள், தந்தையார் காலத்திலேயே தென் மதுரையை அரசாண்டவள். பக்கத்து நாடாய ஈழத்திலும் பாதியைப் பற்றியவள். அவள் ஆட்சிக்காலத்தில் தென் மதுரை சுபீட்சம் பெற்றிருந்தது என்பர்.

### உதயகன்னி

பாரதியார் சமுதாயக் குறைகளை நீக்கவும் நாடு சுதந்திரம் அடையவும் பெண்களின் துணை தேவை எனக் கருதி புதுமைப் பெண்ணைப் பராசக்தியின் சொரூபமாகக் கண்டு பாடினார். நாட்டின் விடுதலைக்குப் பெண்கள் விடுதலை முதற்படி எனக் கண்டார். "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கும் வழக்கத்தை வேரோடு வீழ்த்தி விடுதலை வழங்கினார். பெண் குலத்தின் வெற்றிகண்டு பூரித்துத் தோள் கொட்டினார். பெண்மை வாழ்க, பெண்மை வெல்க, என்று பாடியமை பூரண மானுட மேம்பாட்டுக்காகவேதான் என்பர்.

### அம்மா! தாயே!

இன்று அகதிகள் என்னும் போர்வையில் வாசலில் வருவோரெல்லோரும் கூவும் குரல், நெடும் பண்டைக் காலத்திலேயே அம்மா! தாயே! என்று ஒலித்தது. கொடுப்பவள் தாயுள்ளம் கொண்ட பெண் என்பது தெரிந்த இரகசியம். தசரதன் ஆண்மகன். சக்கரவர்த்தி, ஆண்மை மிகுந்தவன். அவன் செங்கோல் பிடிக்கும்போது பெண்பாலாகிவிடுகிறான் என்று கம்பர் சூசகமாகப் பாடுகிறார். "தாயொக்கும் அன்பில்......" என வருவது அந்தப் பாடல். இராமனின் அழகை நயக்க அனைவருமே பெண்பாலாராகிவிட்டனர்.

## ஆகாசவாணி

அயல் நாடாய எங்கள் பண்பாட்டு நாட்டின் வானொலி ஆகாசவாணி என ஒலிக்கிறது. மதுரமான நிகழ்ச்சிகளை ஒலிக்கிறது. அது வாழ்க! ஆகாசவாணி உடலில்லாமல் ஒலிக்கும் ஒரு தருமதேவதை, அது புத்து சொல்லுகிறது, புவத்து சொல்லுகிறது என்று தத்தித் தடுமாறாது உள்ளதை உள்ளவாறே கூறுவது. ஆகாசவாணி தர்மதேவதையாகலின் எல்லாச் செய்கைகளுக்கும் சாட்சியாயுள்ளது. இது இறைவனால் நியமிக்கப் பெற்ற சக்தி. இவளுடைய வாக்கு, சந்தர்ப்பத்துக்கு அமையப் பிறருடைய பேச்சு மூலம் ஒலிக்கும். இவ் ஒலியை அசரீரி எனவும் வழங்குவர்.

## ஆங்கிலப்புலமை

சரோஜினி நாயுடுவின் ஆங்கிலப் புலமை பொன் வாசற்படி, காலப்பறவை, முறிந்த இறகு முதலிய பாடல்களில் முறுக்கேறியுள்ளது. அவருடைய பேச்சின் மூச்சு நேருவையும் சுபாசையும் தேசசேவைக்கு இழுத்தது. இந்தியாவுக்கு என்று அவர் 1903ல் மேடையில் பாடிய ஆங்கிலப்பாட்டு காங்கிரஸ்காரரை உருகவைத்தது. ஆங்கிலேயரைக் கொதிக்கவைத்தது.

அன்னிபெசன் அம்மையார் அழைப்பு விடுத்ததும் 1916ல் உள்வீட்டார் ஆட்சி இயக்கத்தில் சேர்ந்தார். காந்தியடிகளின் தூய்மை எளிமையில் தம் வயமிழந்து அவரைப் பின்பற்றினார், தென்னாபிரிக்கா சென்று இந்தியரை உற்சாகமூட்டி அக்கிரமத்தை எதிர்க்கத் தூண்டினார். அவர் 1925ல் காங்கிரஸ் தலைவராகிப் பெரும் பணிபுரிந்தார்.

செல்வி மேயோ என்னும் அமெரிக்க மாது பாரதம் வந்து, சேரிப்பகுதி அழுக்கான இடங்களைப் பார்த்து விட்டு இந்தியமாதா என்னும் நூலை ஆங்கிலத்தில் வம்புத்தனமாக எழுதினார். அவளுக்கு இந்தியபிதா என்னும் நூலை அறிஞர்கள் எழுதி அவளின் ஆபாச மனப்பான்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

★ விருந்தோம்புவதில் சிறந்த யாகாதிபதி பெண் ★

# குழந்தைக் கல்விமுறை தந்த மேரியா மொன்ரிசோரி அம்மையார்

இன்று நாடு நகரமெங்கும் மூன்று வயதுக் குழந்தைகளை அம்மா, அப்பா தூக்கிக்கொண்டு சென்று ஆடிப் பாடி, துள்ளிக் குதித்துப் படிக்கவைக்குமிடம் நேர்சரிப் பள்ளிக்கூடம். வீதிகள்தோறும் ஆடல்பாடல் வல்ல இளம்பெண்கள் இந்தப்பள்ளிகளை அருமையாக நடத்துகிறார்கள். இவர்களுக்கு ஒரு குறுகிய காலப் பயிற்சியும் கிடைக்கிறது, பெற்றோர் கொடுக்கும் வேதனத்துளிகள் போதுமானவைகள்போலும்.

இத்தாலி நாட்டில் சிருவல்லி நகரில் 31-8-1870இல் பிறந்த மொன்ரிசோரி, உரோமாபுரியில் 1894இல் முன்னோடியாக மருத்துவப் பட்டம் பெற்றார். சிறுவரின் உளவியல், கல்விமுறைகளில் ஈடுபாடுகொண்ட இவர் அவர்களுக்குப் புதுவிதமாகப் பாடம் நடத்திக் காட்டினார். இவருடைய திறமையை வியந்தவர்கள் இவருக்குத் தங்கப் பதக்கம் அணிந்து கௌரவித்தனர். இவர் மனப்பலம் குறைந்த குழந்தைகளை நெறிப்படுத்தும் இயக்குநராகப் பணிபுரிந்தபோதே தமது குழந்தைக்கல்விப் புதுமுறையை அணுகினார், கண்டார். இவர் இங்கிலாந்துக்குச் சென்றபோது இந்தமுறை அங்கே பழக்கமானது. அம்மையாரின் மாணுக்கியரான ஹெலன் பேர்கெஸ்ற் என்பார் டால்ரன் கல்விமுறையைக் கண்டு புகழ் பெற்றார்.

இவர்களுக்கு முன்னதாகவே சுவிற்சர்லாந்து நாட்டைச்சேர்ந்த யோன் ஹென்றிச்பெஸ்ரலோஜி என்பார் குழந்தைகளிடம் அவதானம், அறிதல் பேசுதல், அளத்தல் வரைதல், எழுதுதல், எண்ணுதல் முதலியவற்றைப் படிக்கிரமாக அணுகும் முறையை இருபது ஆண்டுக்காலம் ஆராய்ந்தார்.

இவரின் அணுகுமுறையில் அடிவைத்து ஆராய்ந்த பிரடெரிக் புரோபெல் என்னும் ஜேமானியர், சிறுவர் சிறுமியரின் உடல் வளர்ச்சி உள்ளத்தின் வளர்ச்சிக்கான அமைப்பில் சுய உதவிமுறையைக் கண்டார், அஃதாவது குழந்தைகள் தம்மிட்டம்போல அறிந்து கொள்ளுதல், இதுவே விளையாட்டு மூலம் கல்வி என வழங்கும் கின்டர் கார்ட்டின் முறையாகும்.


---

## பெண்களே உங்களுக்கு

### உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?

### நன்று எங்கள் வாழ்த்து

1. ஒருவரை ஒருவர் சரியாக அறிந்துகொள்ளுங்கள்.
2. நட்புரிமை நிலவ வாழுங்கள்.
3. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கொள்ளுங்கள்.
4. கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளுங்கள்.
5. அளவான உடலுறவு கொள்ளுங்கள்.
6. பிள்ளைகள் நலங்கருதிச் சண்டையைத் தவிருங்கள்.
7. குணநலன்களைப் பாராட்டுங்கள்.



## அன்னை கஸ்தூரிபா காந்தி

குஜராத் மாநிலத்தில் கத்தியவார் பிரதேசத்தில் போர்பந்தர் என்னும் இடத்தில் கோகுல்தாஸ் என்பாரின் புதல்வியாய் 1869இல் பிறந்த இவர், 1882இல் காந்தி அடிகளை மணந்து, அவருடைய் கடும் சோதனைகளைத் தாங்கி மனையறங்காத்தவர். காந்தியடிகள் கஸ்தூரிபாவை மலகூடங் கழுவச்செய்தவர். காந்தியடிகளின் சத்தியசோதனைக்கு உற்றதுணை கஸ்தூரிபா. காந்தியடிகளின் சேவாக்கிரமத்தின் பொறுப்பாளியாக இவர் இருக்குமளவில் காந்தியடிகள் இவரைப் பழக்கினார். பத்தாவுக்கேற்ற பதிவிரதை இவர். 1944இல் சிறையிலேயே உயிர்விட்டார். உரிமைமுன் போக்கிய ஒளியுடைய மாமேதை மகாத்மா.

---

## அரபி, பார்ஸி கலப்பு

இந்தியாவில், இந்துஸ்தான், குஜராத்தி, மராத்தி ஆகிய மொழிகளில் அரபி, பார்ஸி மொழிகளின் கலப்பு அதிகம்.

தமிழ்நாட்டில் ஓரளவுக்கு அரபி, பார்ஸி கலந்துள்ளன. அவை திரிந்தும் திரியாமலும் கலந்து உபயோகத்தில் வந்துள்ளன, அவற்றில் சில சொற்கள் இங்கேயும் ஒலிக்கின்றன.

மகசூல், வசூல், அசல், பாக்கி, ஜாமீன், ரசீது, வக்கீல், தாக்கல், ஜமீன், மாமூல், மிராசு, காப்பி, ஜல்தி, சரிகை, ருமால், குல்லா, தரம், பேஷ், சபாஷ், கச்சேரி, தயார், குஸ்தி, கம்மி, தராசு, நாசூக், ஜாஸ்தி, சாமான், தகரார், ஆசாமி, இனம், சிபாரிசு, வாரிசு, பைசல், அலாதி, வாபிஸ், கடதாசி, காகிதம், தினுசு, ரகம், சுமார், பதில் இவைபோன்ற இன்னும் பல மொழிகளை இராஜாஜி தொகுத்துள்ளார்.

---

### விச்சுவாவதி

கந்தர்வப் பெண்ணான இவள் உமாதேவியாரை மகளாகப் பெறுவதற்குத் தவஞ்செய்தாள். தவத்துக்கு இரங்கிய உமாதேவியார், விச்சுவாவதியின் அடுத்த பிறப்பில் அவளை நல்ல இடத்திற் பிறப்பித்துக் காஞ்சனமாலை என வளரச்செய்து, மலையத்துவசன் மனைவியாக்கி, பின் அவள் மடியில் குழந்தையாக இருந்தாள். விக்சுவாவதியின் தவம் அடுத்த பிறப்பில் பயனளித்தவாறு.

---

★ விருந்தோம்புவதில் சிறந்த யாகாதிபதி பெண் ★




## மாதாஜி

மாதாஜி என்றதும் தலை தானே கிழக்கே திரும்பித் திருகோண மலைக்கு ஒரு கும்பிடு போடுகிறது. பெரிய இடத்துப் பெண். தமிழ், ஆங்கிலம், வடமொழி நன்றாகக் கற்றவர். இளமையிலேயே துறவு மனப்பான்மை கொண்டு இமயம்வரை சென்று, இருஷிகேசம் சிவானந்தர் ஆச்சிரமப் பயிற்சி பெற்று, தீக்கை உபதேசம் காவி பெற்று மீண்டு சேவை இல்லம் அமைத்து, ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைத்தவர்.

## தமிழ் மகள்

இரண்டு தலைமுறைக் காலத்துக்கு முன் யாழ்ப்பாணத்தில் படிப்பார்வம் உள்ள பழைய குடும்பம். பெரிய குடும்பம். ஒரு பகுதியில் தா. செல்லப்பாபிள்ளை, தா. பொன்னம்பலபிள்ளை அண்ணனும் தம்பியும். அண்ணன் திருவாங்கூரில் நீதியரசர், தம்பி மதுபரிபாலன ஆணையாளர்.

இன்னொருபால் வீரவாகர் என்பார் குடும்பம். இவர் மைந்தர் கதிரவேற்பிள்ளை. இளம் வயதில் பட்டதாரியாகவே பீ.ஏ. தம்பி என்று செல்லப்பெயர். அது பீ. ஏ. தம்பீ ஒழுங்கையின் பெயராய் நிலைக்கிறது.

பீ. ஏ. தம்பிக்குப் பிள்ளைச் செல்வம் அதிகம். தமிழரசு வளர்த்த டாக்டர் பரமநாதனை உள்ளிட்டவர்களுள் மங்களம்மாள் ஒரு சகோதரி.

ஆணையாளர் பொன்னம்பலபிள்ளை அவர்களின் அருமை மைந்தன் மாசிலாமணி படிப்பாளி, எழுத்தாளன், சிந்தனையாளன், காந்தியவாதி.

மங்கலம் பொலிய மாசிலாமணி மங்களம்மாவை மணந்து மகேஸ்வரி என்னும் ஒரு கலையரசியைப் பெற்றார். எல்லோரும் கலைவளர்த்த குடும்பத்தினராவர். மாசிலாமணியும் மங்களம்மாவும் தங்கள் மகளைப் பெருமைமிக்க சாந்தி நிகேதனத்துக்கு அனுப்பிக் கலை பயிலச் செய்தனர். கலைபயின்று வந்த மகேசுவரி, கலைப் புலவர் நவரத்தினம் அவர்களின் கலையாக்கத்துக்கும் வாழ்க்கைக்கும் துணையானார். திருமண வேளையில், பெரிய சிங்கி ஆசிரியர் கலை, கலையை மணக்கிறது என்று வாழ்த்தினர்.

ஒரு சமயம் விபுலானந்த அடிகளார் தமது யாழ் நூலைத் தமிழர் நாட்டில் அரங்கேற்றியபின், தாம் கண்ட யாழோடு யாழ்ப்பாணம் வந்தார். வைத்தீஸ்வர வித்தியாசாலையில் கூட்டம். அவர்கொண்டுவந்த யாழை மகேஸ்வரி நவரத்தினம் வாசித்துக் காட்டினார். அது கலை விருந்து.

மாதர் திலகம் மங்களம்மா இன்றிருந்தால் 103 வயதாகும். அவர் மறைந்து 16 வருடங்களாய் விட்டன. தமிழினத்துக்குப் பொதுவாகவும் தமிழ்ப் பெண்களுக்குச் சிறப்பாகவும் அவர் செய்த பன்முகத் தொண்டு பரவலானது. அவர் செய்த தியாகம் பெரிது. நற்போக்கினடிப்படையில் மாதரை முற்போக்குப் பாதையில் நடத்திச் செல்ல அவர் பெரிதும் முயன்றார். அவர் துணிவோடு தமிழ்மகள் என்னும் பத்திரிகையையும் நடத்திப் பெண்களைத் தட்டி எழுப்பினர். இவர் இளம் வயதிலேயே வண்ணார்பண்ணையில் சமூகசேவையின் பொருட்டுச் சேவாசங்கம் அமைத்தார். அது 1902 ஆம் ஆண்டளவிலாகும். இவர் சாடிய அக்காலத்துத் தீய வழக்கம் தீண்டாமை.

கணவனார் மாசிலாமணி காந்திப்பக்தர். அவர் மக்கள் குரல் என்னும் பத்திரிகையை நடத்தி வந்தார். வசந்தனின் அழைப்பு என்னும் பெரிய நூலையும் ஆங்கிலத்தில் எழுதினர். கணவனும் மனைவியும் கதர்மய மானவர்கள். இந்தியாவில் சிலகாலம் இருவரும் உறைந்து காந்தியப்பணி புரிந்தமை வரலாறு. ஆரம்ப சுகாதாரம் முதலியனவுக்காகச் சேரி திருத்தும் பணியிலும் மங்களம்மா ஈடுபட்டார். சின்னஞ்சிறிய உருவம். ஓடித்திரிந்து அலுப்பில்லாமல் உழைக்கும் உள்ளம். போதிய பொருள் வசதி. நல்ல மனம். இனிய பேச்சு. பிறர் நலம் கருதும் பண்பு மங்களம்மாவின் மாண்பு.

கணவனார் மறைந்த பின்னர், ஆறிய கற்பினராய்த் தூய வெண்ணுடை தரித்து மங்கையர்க்காக முழுநேரச் சேவை செய்ய வீடுவிடாகச் சென்ற துறவுக் கோலம் பெரிது.

## அக்கமாதேவி

நின்மலன், சுமதி தம்பதிகள் பெற்ற மாதேவி என்பாள் அழகிற் சிறந்தவள். அறிவிற் சிறந்தவள். விச்சலன் என்னும் அரசன் அவளை விரும்பியபோது, அவள் அவனிடம் நிர்ப்பந்தப்படுத்தக்கூடாது என்று உறுதிமொழி பெற்றுக்கொண்டாள். பின்னர் அவனைச் சமணத்திலிருந்து வீரசைவத்துக்கு மீளுமாறு கேட்டாள். அவன் சமயம் மாறச் சம்மதம் கொடுக்காமையினால் இவளும் திருமணம் செய்யமறுத்து, அல்லமர் என்பாரிடம் உபதேசம் பெற்று வீரசைவம் வளர்த்தாள்.

## அக்கள நிம்மதி

நந்தி எனப்பெயர்பெற்ற பல்லவ வேந்தர்களுள் மூன்றும் நந்திவர்மன் தெள்ளாறு எறிந்த வீரன். இவனை ஈன்ற வீரத்தாயார் அக்கள நிம்மதி என்னும் பெண்.

## அசோதை

யசோதை எனவும் வழங்கும் இடையர்குலப் பெருமகள். நந்தகோபன் மனைவி. கண்ணனை வளர்த்தவள் கண்ணனின் குறும்புத்தனங்களை வெகுவாக இரசித்தவள். கண்ணனின் வாய்க்குள் எல்லா உலகங்களையும் கண்டு ஆச்சரியம் அடைந்தவள்.

★ இல்லறத்தை நல்லறமாக்குபவள் பெண் ★



# சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியம்

எங்கள் பரம்பரை திருக்கைலாய பரம்பரை என்று இறுமாப்போடு கூறுவதற்குக் காரணம் அகச்சந்தான குரவர், புறச்சந்தான குரவர் வழியில் வந்த தொடர் பாகும். புறச்சந்தான குரவர் வரிசையில் இறுதியில் வந்தவர் தில்லை மூவாயிரவருள் ஒருவராய உமாபதி சிவாசாரியராவர். இவர் வழியில் வந்த சீடர் பரம்பரையினர் தமிழ்நாட்டில் திருமடங்கள் அமைத்துள்ளார்கள். அவர்கள் அமைத்த திருமடங்களுள் திருவாவடுதுறை ஆதீனமும், தர்மபுர ஆதீனமும் பெருமடங்களாகும். தர்மபுரவாதீனம் இருபத்தேழு பெரிய திருக்கோயில்களை நிர்வாகஞ் செய்வதோடு, கலைக்கல்லூரி நடத்துகிறது. நூல்களை மலிவாகப் பிரசுரித்து வழங்குகிறது. ஞானசம்பந்தம் என்னும் திங்கள் ஏட்டினை வெளியிடுகிறது.

இங்ஙனம் பெருமை பெற்ற தருமையாதீனத்தால் உருவாக்கப்பெற்ற செல்வி பல துறைகளிலும் தேர்ச்சியுள்ளவராய் வசந்தா என்னும் பெயர் பூத்து, வைத்திய நாதன் என்னும் பெரியாரை மணந்து அரிய முறையில் சைவமும் தமிழும் வளர்க்கிறார், பேசுகிறார்.

## எலுமிச்சை

அம்மா, தாயே! உங்கள் வளவில் எலுமிச்சை மரம் உண்டா? இல்லையேல் நட்டுவிட்டீர்களா? அதுவுமில்லையேல் அவசரம் நடுங்கள்.

அம்மா, அது வருடம் முழுவதும் பயன் தரும். அது சமையலுக்கு மாத்திரமல்ல, கரைத்துக் குடிப்பதற்கு மாத்திரமல்ல, இன்னும் பல வைத்தியத் தேவைகளுக்கும் பயன்படுகிறது.

வாய்க்கு உருசியாக, உடம்புக்கு நல்லதாக உடன் சம்பல் இடிப்பதற்கு, சில எலுமிச்சம் இலைகள், மிளகு, உப்பு, உள்ளிப்பூடு, பெருங்காயம் இவற்றை உரலிலிட்டு இடித்து உணவோடு உண்ணலாம்.

உடம்பில் பழச்சாற்றைப் பூசி நீராடினால் ஒளியுள்ள தேஜஸ் உண்டாகும். தடிமன், இருமல், மலேரியா, சுரம் நீங்கப் பழரசம் பயன்தருகிறது.

இருதயத்துக்கும் வயிற்றுக்கும் மிகவும் நல்லது. கொலறு, பிளேக் நோய்களைத் தணிக்கிறது. எலுமிச்சையில்பட்டு வரும் காற்று உடம்புக்கு நல்லது. அதன் பூவின் வாசனை அற்புதமானது.

எலுமிச்சம் பழத்தில் உயிர்ச்சத்து A, B, C, உள்ளன இதன் C சத்து உச்சமானது. மூச்சுத் திணறும்போது, எலுமிச்சம்பழ வாசனை சுகம் தருகிறது. பழரசம் உடன் நிவாரணம் அளிக்கிறது. எலுமிச்சம் பழத்தின் சிற்றிக் அமிலம் பானகங்கள் தயாரிப்பதற்குப் பயன் தருகிறது. பழத்தோலிலிருந்து பலவித வாசனைப் பொருள்கள் தயாரிக்கிறார்கள். மில்க்வைற் தொழிலகம் தயாரிச்கும் ஸ்நானப் பவுடரில் எலுமிச்சங்கோது அதிகம். நச்சுப் புகை, குண்டுப் புகை, செல்லடி முதலிய துன்பங்களில் பழரசம் சுகம் தரும். மறவாதீர்கள்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஆங்கிலப்புலமை

மையைத் தாக்கிய வேளையில் காந்தியடிகள் சரோஜினியை அமெரிக்காவுக்கு அனுப்பினார். அவர் அங்கே ஆணித்தரமாகப்பேசி அமெரிக்கரை அதிரவைத்தார். மேயோவின் பேடித்தனம் அடங்கியது. அவர் உத்தரப் பிரதேசத்தின் ஆளுநராய் இருந்த காலத்தில் எழுபதாம் வயதில் மாரடைப்பால் மறைந்தார். அவரின் புதல்வி பத்மா என்பாரும் தாயைப்போன்று வங்காளமாநில ஆளுநராயிருந்தார்.

## அவிழ்த்துப்பாருங்கள்

1 அம்மா போட்ட தடுக்கை எடுக்கமுடியவில்லை
2 தங்கை தலையிலே பாம்பு
3 தாய் சப்பாணி, மகள் இழுப்பாணி
4 தாய் சப்பாணி, மகள் குத்தாணி
5 தாய் படுப்பாள், மகள் விளையாடுவாள்
6 குந்தி அம்பாள் குடைபிடிக்கிறாள்
7 நரைத்த கிழவி ஊரெல்லாம் ஆடுகிறாள்
8 நூலுக்கு வழிக்கருவி, பெண்ணுக்கு தொழிற்கருவி
9 நெட்டை அக்காள் தாக்கக் கட்டை அக்காள் தாங்குகிறாள்
10 பலபெண்களுக்கு ஒரு குடுமி
11 மங்கலத்தின் சின்னம் மங்கையரின் தோழி
12 மளிகைக்கடையில் இருக்கும் மகாராணி
13 முட்டாக்குக்குள்ளே மூன்று பெண்கள்
14 முத்துப்பல்லழகி முகங்காட்டி நிற்கிறாள்
15 வெள்ளை நீரிலே வேடிக்கை மாது ஆடுகிறாள்
16 உணவை எடுப்பாள் உண்ணாமல் வைப்பாள்
17 அருகில் சென்றால் காலில் வீழ்ந்து வணங்குவாள்
18 ஏழு அறைக்குள் இருப்பவளை இடித்தால் வெளியே வருவாள்
19 கருமைநிறத்தழகி, கானமழை பொழிகிறாள்

1 கோலம் 2 பின்னல் 3 அம்மி குழவி 4 ஆட்டுக்கல் குழவி 5 அம்மி குழவி 6 காளான் 7 புகை 8 ஊசி 9 உலக்கை உரல் 10 உள்ளிப்பூடு 11 மஞ்சள் 12 சாம்பிராணி 13 ஆமணக்கம் முத்து 14 சோளப் பொத்தி 15 மத்து 16 அகப்பை 17 கடல் 18 வரகு 19 குயில்.

★ இறைவழிபாட்டில் எல்லோருமே பெண்கள் ★



## பொன்னு

இரண்டாம் வகுப்பு மாத்திரம் படித்தவர். க. சி. பொன்னு என்று கையொப்பம் இடவும், துணிகள் கிழிந்தால் உருட்டித் தைக்கவும் மாத்திரம் பழகியவர். திருநெல்வேலி, கலட்டி, நீராவியடி, கந்தமடம் எங்கும் இற்றைக்கு இருபதாண்டுகளுக்கு முன் பொன்னுப் பெத்தாச்சி, பொன்னு மாமி, பொன்னு அக்கா என்று நூற்றுக்கணக்கான உறவினர் உள்ளன்போடு அழைப்ப, அவர்கள் இல்லங்கள்தோறும் சென்று நன்மை திமைகளிற் கலந்து உதவி செய்தவர். பழையகாலத்துத் தலையலங்காரஞ் செய்வதில் தலையாயிருந்த இவர் கைவண்ணம் பணியாரஞ் செய்வதிலும் பயிற்சி பெற்றது. வாழைத்தண்டு, இளந்தேங்காய், காளான், நாரத்தங்காய் முதலியவைகளைச் சுவையாகச் சமைப்பதில் தனி ஆற்றல் பெற்றவர். கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பெரியபுராணம் கேள்வி ஞானத்தால் தாடன மானவர். ஏறக்குறைய இருநூறு உறவினர்களின் தலைமுறை வந்த தோம்புக்கதை மனப்பாடமாகச் சொன்னவர். பழைய புலவர்கள் பெரியவர்கள் வரலாறுகள் கேட்டறிந்து சொன்னவர். ஆறு ஏழுவயதுப் பிள்ளையாயிருந்த காலத்தில் தாய்மாமன் விசுவாமித்திரர் தம்பர் என்பார் வீட்டில் கடையிற்சுவாமியாரால் உணவூட்டப் பெற்றவர். தமிழாசிரியரான தனது மைந்தனுக்குப் பழைய கதைகள் சொன்னவர். அந்த ஆசிரியர்தான் உங்கள் மில்க்வைற் செய்தி ஆசிரியர்.

## வடமராட்சி வனிதை

கெருடாவில் ஊரைச்சேர்ந்த ஆறுமுகத்தாபிள்ளை தந்த குமாரசுவாமி முதலியார் ஆங்கிலேயரின் ஆட்சிக் கால முதலாகப் பெரும் உத்தியோகம் வகித்தவர். மலை நாடுகளின் இணைப்பு, சட்டசபை அமைப்பு முதலிய வைபவங்களில் முன்னணியில் நின்ற முதற்பெரும் இராசவாசல் முதலியார். அவரின் அருமை மனைவி விசாலாட்சி நல்லறச் செல்வி. விசாலாட்சியின் வயிற்றில் வந்தவரே செல்லாச்சி. இவர் சேர் இராமநாதன் ஆகியோரின் தாய். விசாலாட்சி பெற்ற மைந்தன் சேர் முத்துக்குமாரசுவாமி.

இளமையில் விதவையான விசாலாட்சி பிள்ளைகளை அருமையாக வளர்த்தவர். கொழும்பில் கடல்வீதி என்னும் "சீஸ்றீற்" வீட்டிலிருந்து பலமுறை கால்நடையாகக் கதிர்காமம் சென்று மகேசுர பூசை செய்தவர். பெருந்தொகையான அரிசி முதலாய பொருள்களை ஏவலாளர் தலைச்சுமை தோட்சுமையாக எடுத்துப்போனதும் உண்டு. விசாலாட்சியின் தவம் பெரிது.


# Learn your English

### Give one word for each group

1. A bag of letters
2. A young unmarried woman
3. The way a thing happens
4. A large dwelling house
5. The flat representation of the earth
6. An assembly for buying and selling
7. A wonderful thing
8. A quantity of matter
9. One who employs another
10. A wife or husband
11. Complete in growth
12. Related through mother
13. To come face to face
14. Flesh of animals used as food
15. To become lequid by heating.

1. Mail 2. Maid 3. Manner 4. Mansion 5. Map 6. Market 7. Marvel 8. Mass 9. Master 10. Mate 11. Mature 12. Maternal 13. Meet 14. Meat 15. Melt.

★ நதிகள் யாவும் தாய்மைக்குணம் உள்ளவை ★



## மில்க்வைற் மீனாட்சிப்பிள்ளை

மில்க்வைற் செய்தியின் மங்கையர் சிறப்பிதழில் மீனாட்சிப் பிள்ளையைப்பற்றி எழுதாவிட்டால் கல்யாண வீட்டில் தாலிகட்ட மறந்த கதையாய் விடும். அம்மையார் கைகொடுப்ப 1927ஆம் ஆண்டில் உருண்ட நீலசோப் தனிக் குழந்தையாய்த் துள்ளி விளையாடியது. அடுத்து இந்தியாவிலிருந்து ஓடங்களில் வந்து குவிந்த உவர்மண் கொண்டு, உப்புச்சவர்க்காரம் என ஒன்றைக் கந்தையா பிள்ளை தயாரித்தபோதும் அம்மையார் கைகொடுத்தார். கிடுகு வேய்ந்த வீடு மழைக்காலத்தில் ஒழுகுவதையும் பாராமல், சவர்க்காரத்தின் பதம் பிழைக்காமல் அம்மையார் கவனமெடுத்தார். உவர்மண் வரத்துக்குறையவே ஊத்தைச்சோடா என்னும் சோடாத்தூள் பயன்கொடுத்தது.

இவ்வாறாக தாபகர் கந்தையாபிள்ளை அவர்களுக்குப் பின் மைந்தர் கனகராசா அவர்கள் தொழிலதிபராகிப் பல வித சவர்க்கார வகைகளை நவீன முறையில் நூற்றுக்கணக்கான தொழிலாளர் செய்தமையை மீனாட்சிப்பிள்ளை கண்டுகளித்தார். அவர் தொழிலகத்தின் பொன்விழாப் பொலிவையும் 1977இல் கண்டுகளித்தார். இத்தனை சவர்க்கார வகைகளும் அவருடைய நல்லாசி பெற்றனவாகும்.

## பெண்மைக்குப் பெருமை தருபவர்

பெண்மைக்குப் பெருமை தருகின்ற தெய்வமூர்த்தங்கள், தேவமாதர்கள், ரிஷிபத்தினிகள் மானுடப் பெண்கள் வரிசைகள் பெரியவை நீண்டவை. அவர்கள் எல்லோரையும் நாம் இங்கே குறிப்பிடுவதாயின் இதழ் மிகப்பெரியதாய் விரிந்துவிடும் என அஞ்சிப் பலரை விடுத்துள்ளோம். நவசக்திகள், அஷ்ட லட்சுமிகள், சப்தமாதர்கள், பஞ்சகன்னியர்கள், இன்னும் பலராய ரிஷிபத்தினியர், மன்னர் தேவியர்கள், காப்பிய புராண இதிகாச கதா நாயகியர் பலரை நாம் மனதில் எண்ணியுள்ளோம்.

காலந்தோறும் நமது பெண் குழந்தையர்கள் பெருமாட்டியரைப் பற்றி நன்றாக அறியவைப்போம். காலம் வரும்வரை காத்திருப்போம்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. யாழ்ப்பாணத்தில் அண்மையில் வாழ்ந்த தவமுதாட்டியர்.
2. தமிழ்நாட்டின் பெரிய முருக பக்தை.
3. திரைப்படவுலகின் புகழைவிட்டுக் குடும்பம் நடத்தும் தலைவி.
4. குச்சிப்பிடி ஆட்டம் 24 மணிநேரம் ஓயாமல் ஆடிய பெண்.
5. வடஇந்திய கிருஷ்ண பக்தர் துகராம் சுவாமியின் தேவி.
6. அசோக சக்கரவர்த்தியாரின் மனைவி.
7. இரவீந்திரநாத்தாகூரின் மனைவி.
8. விஞ்ஞானி சந்திர வெங்கடராமன் அவர்களின் மனைவி.
9. நகைச்சுவை நாடக எழுத்தாளர் பேனாட்ஷோவின் மனைவி.
10. பந்தநல்லூரின் பரதநாட்டிய ராணி.
11. ஐக்கிய நாடுகள் புகழ்ந்த தமிழ்ப்பாடகி.
12. தமிழ்நாட்டின் பழைய நகைச்சுவை நடிகை.

விடைகள்:
1. சடையம்மா, செல்லாச்சி அம்மா. 2. மருதூர் அம்மை. 3. நான்சி றீகன். 4. செல்வி சாரளாகுமாரி (ஆந்திரா). 5. ஜிஜாய். 6. தேவி. 7. மிரிணாலினிதேவி. 8. உலோகசுந்தரி. 9. சாளற். 10. ஜயலட்சுமி. 11. எம். எஸ். சுப்புலட்சுமி. 12. ரீ. ஏ. மதுரம்.

## மில்க்வைற் சலவைப் பவுடரின் சுவையான சம்பவம்

விநோபாஜி அவர்களின் பாதயாத்திரை சகோதரிகளைத் தலைமன்னார் கப்பலிலிருந்து இறக்கி வரவேற்ற பெருமை மில்க்வைற் தொழிலகத்துக்குரியது. சகோதரிகள் கால்நடையாக யாழ்ப்பாணம் வந்ததும், மில்க்வைற் தொழிலகத்துக்கு வருகை புரிந்தார்கள். அவர்கள் களைப்பாறியதும் தங்கள் உடைகளைச் சுத்தஞ்செய்வதற்கு, சலவைப்பவுடர் தாருங்கள் என்றார்கள். அந்தக் காலத்தில் சலவைப்பவுடர் கிடையாது. ஏன் நீங்கள் சலவைப் பவுடர் தயாரிக்கவில்லை என்று எச்சரித்து விண்ணப்பித்தார்கள். உணர்ச்சிவயப்பட்ட தொழிலதிபர் உடனடியாக மில்க்வைற் சலவைப்பவுடர் தயாரிப்பாராயினர். மாதர் ஆலோசனை இருந்தவாறு.

★ நதிகள் யாவும் தாய்மைக்குணம் உள்ளவை ★




## பறக்கும் சாதனை

இன்று எங்கள் குழந்தைகள் மேலே பறக்கும் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், பொம்பர்கள், ஜெற்றுகள் முதலானவற்றின் சத்தத்தைக் கேட்ட அளவிலேயே இனம் அறிந்து கூறுகிறார்கள். அவற்றைப் பார்த்துப் பார்த்து அலுப்பு உண்டாகிவிட்டது.

உலக நாடுகள் பெரிய கழுகுகள் பருந்துகள்போல விமானங்களைப் பறக்கவிடும் நேரத்தில் நாங்களும் ஊர்க் குருவிகளை உயரவிட்டுப் பார்க்கிறோம். ஊர்க்குருவி மேலே பறக்கும்போது எச்சமிடும்போது நச்சுத்தன்மையான அழிவுகள் உண்டாகின்றன.

உலகநாடுகள் பறவைக் கப்பலைச் செய்யுமுன் புஷ்ப விமானம் பறந்தது, மயில்பொறி பறந்தது, முனிவரின் சுக்குமாந்தடி எல்லாம் பறந்தன என்பது எங்கள் பழங் கதை. சங்ககாலப் புலவன் பைலற் என்னும் வலவன் ஏவாத வானவூர்த்தி என்று ஒன்று பறப்பதைக் கற்பனையிற் கண்டான். புலவர்கள் புகழ வாழ்வாங்கு வாழ்பவன், விசும்பில் வலவன் ஏவா வானவூர்தியில் கிரக மண்டலங்களைச் சுற்றி வருமளவில் பெருமை பெறுவான் என்று பாடினான். பறவைக் கப்பல்களைப் பறக்கவிட்டவறைற் சகோதரர், அல்கொட்பிறவுண், பிளெறியட் மொறிசன், கேணல்கொடீ, கிங்ஸ்போட்சிமித், ஹிங்லெர் விண்ட்பேர்க் முதலானோர் வாழ்க. பாரதநாடும் வருங் காலத்தில் விட்டுக்கொடுக்காது.

## ஆண்மூச்சும் பெண்மூச்சும்

அறுபது ஆண்டுகளுக்கு முன், பியர்ஸ் என்னும் ஸ்பானிஸ்காரன் இலங்கைக்கு வந்து கொழும்பில் காலிமுக வீதியையும், மலைநாட்டில் சில தேயிலைத் தோட்டங்களையும் பார்த்துவிட்டு இலங்கையைப் பார்த்துவிட்டதாகக் கருதிப் பத்திரிகையில் தம் கருத்தை எழுதினார்.

இலங்கை ஆண் மூச்சுள்ள நாடு. அங்கே பெண் மூச்சுக்கு இடமில்லை. பெண்கள் வீட்டைவிட்டு அதிகம் வெளிவருவதில்லை. அவர்கள் செய்யும் இரண்டே இரண்டு வேலைகள் தெருக்கூட்டுவதும், தேயிலை பிடுங்குவதுமாகும்.

அவர் சென்ற பிரபவ ஆண்டில் அவ்வாறு எழுதினார். இன்று அடுத்த பிரபவ ஆண்டில் இலங்கையில் பெண்கள் பெரிய உத்தியோகங்கள் உட்படப் பல வேலைகள் பார்க்கிறார்கள். அண்மையில் எடுக்கப்பட்ட கணிப்பில் இருபத்தாறுவீத முகாமையாளர் பெண்களாவர்.

## நல்லூரில் யூலை மாதம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | வியாழன் | — | முத்துக்குமாரசுவாமி அபிடேகம் | — காலை |
| 17. | வெள்ளி | — | சங்கிராந்தி தீர்த்தம் | — காலை |
| 20. | திங்கள் | — | கார்த்திகை விழா | — மாலை 5-00 |
| 21. | செவ்வாய் | — | திருக்கலியாணப் படிப்பு | |
| 31. | வெள்ளி | — | முத்துக்குமாரசுவாமி அபிடேகம் | — காலை |
| 31. | வெள்ளி | — | கொடியேற்றம் | — பகல் 10-00 |

### பழங்கள்

நெல்லி: பித்தத்தைப் போக்கும்

நாவல்: குடற்புண்ணை நீக்கும்


உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள்!


**சுப்ப மில்க்வைற் சோப்**




250 இறும் கட்டி ரூபா 5/- மட்டுமே.

10 சுப்ப மில்க்வைற் மேலுறைகள் அல்லது
10 பார்சோப் மேலுறைகள் அல்லது
100 நீலசோப் மேலுறைகள் அனுப்பி

அழகிய நூல் தொப்பி ஒன்றை




இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. இ. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1 – 7 – 87